காத்தான்குடி நடுத்தெரு
முகிதீன் மெத்தைப் பள்ளி வரலாறு

1860ம் ஆண்டு காத்தான்குடி நடுத்தெரு முகைதீன் மெத்தைப் பள்ளி வாசலை முதன் முதல் உடைத்துப் புதிதாகப் பெருப்பித்துக் கட்டுவதற்கு ஆரம்பித்தவர் வடக்கனுகுடியைச் சேர்ந்த அலி உடையார் அசனார் மரைக்காயராகும். (இவர் எனது பெத்தாவுக்கு உடன் பிறந்த சகோதரனும், எனது தாய்க்குத் தாய்மாமனும் எனக்கு அப்பாவுமாவார்.)

இவர் இப்பள்ளி வாசலைக் கட்டுவதற்கு மரங்கள் தேவைப் பட்டபோது அவ்வமையம் இப்பகுதி மாகாண அதிபராக(G. A.) இருந்த பிசர்துரை அவர்களிடம் 1000 மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி கேட்டார், ஆனல் அவரோ மறுத்து விட்டு, மறு நாள் தனது குடும்பத்தவருடன் பொத்துவில் பகுதிக்குச் சுற்றுலா சென்றார். இடையே காட்டு யானைகளால் மறிக்கப்பட்டுத் தனது பிரயாணத்தைத் தொடரமுடியாது தடுக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் அவரது மனைவி தன் கணவருடன் ''முஸ்லிம்கள் பள்ளி கட்டுவதற்கு மரம் கேட்டுக் கொடுக்காத காரணத்தினுல்தான் நமக்கு இந்த ஆபத்து வந்தது'' என்று கூற துரை அவர்களும் இந்த ஆபத்திலிருந்து நீங்கி விட்டால் பள்ளி வாசலுக்கு 1000 மரம் வெட்ட அனுமதி கொடுப்பேன் என்று உறுதி கொண்டார். பாதையை விட்டும் யானைக் கூட்டம் விலகியது. சுற்றுலா முடிந்து வந்தவுடன் அசனார் மரைக்காயர் அவர்களை அழைத்து 1000 மரங்கள் வெட்ட அனுமதி அளித்தார். இம்மரங்களில் தேவையான அளவு வெட்டித்தான் பள்ளி வாசல் அப்போது கட்டி முடிக்கப்பட்டது. ஆனுல் இரு விறுந்தைகளும் முடிவுறுத நிலையில் இருக்க அசனார் மரைக்காயர் காலமானுர்.

இதன் பின் இவருக்கு பதிலாக மர்ஹூம் அலி உடையார் ஆதம்பாவா (அவரின் சகோதரர்) அவர்களைத் தலைவராக வைத்து இன்னும் பல மரைக்காயமார்களையும் உறுப்பினராகக் கொண்டு பள்ளியைப் பராமரித்து வந்தனர்.

இக்காலத்தில் இறைவனருளால் இரங்கூனிலிருந்து வெட்டப்பட்ட மிகப்பெரிய கீயாத்து மரம் ஒன்று கடல் மார்க்கமாக வந்து, எமது பள்ளி வாசலுக்கு நேர் கடற்கரையில் கரை

தட்டியது. மற்றைய மூன்று தெரு மரைக்காயமார்களும் தங்கள் தங்கள் பள்ளி வாசலுக்கே உரியது எனக் கூற மர்ஹூம் சங்கைக்குரிய ஜெயின் மௌலானா அவர்கள் இந்த மரத்தடியே வந்து மூன்று திசைகளிலும் பார்த்த பின் இம் மரம் மெத்தப் பள்ளி வாயலுக்கே உரித்தானது என்று கூறிவிட்டார்கள்.

இம் மரத்தைக்கொண்டே இரு விருந்தைகளும் முற்றாய் முடிக்கப்பட்டது. மர்ஹூம் அலி முகைதீன்பாவா ஹாஜியார் (ஜனூப் A. அகமது லெவ்வை J. P. அவர்களின் பூட்டன்) அவர்கள் அப்போது பள்ளியில் இருந்த கொட்டுக் கிணற்றை அகற்றிவிட்டு கற்கிணறு கட்டித் துலாவும் துலாக்காலும் போட்டுக் கொடுத்தார். இவரும் ஏனைய மரைக்காயமார்களும் சேர்ந்து சொறிக்கல்லால் பள்ளி வாசலைச் சுற்றி மதிற் சுவர் கட்டினர்.

1860ம் ஆண்டு தொடக்கம் 1913ம் ஆண்டு வரை 58 வருடங்கள் வடக்கனுகுடி மரைக்காயமார் தலைமையிலேயே பள்ளி வாசல் பராமரிக்கப்பட்டு வந்தது, என்பதை மறுக்க முடியாது. 1918ம் ஆண்டு வரை அலி முகைதீன்பாவா ஹாஜியார், கணக்கப்பிள்ளை ஹாஜியார் இருவரையும் தவிர ஏனைய மரக்காயமார்கள் எல்லாம் மறைந்து விட்டார்கள். இவர்களும் வயதடைந்து விட்ட காரணத்தினுல் பொதுமக்களின் விருப்பத்தின் பேரில் 30 மரைக்காயர்மார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவர்களின் தலைவராக் நெய்னு ஓடாவி குடியைச் சேந்த அகமன் போடியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இம் மரைக்காயமார்கள் காலத்தில் 'ஹவுலு' வீடு கட்டி முடிக்கப்பட்டது. குர்ஆன் பாடசாலை ஒன்றையும் இவர் அமைத்துக்கொடுத்தார். புஹாரி ஷரீப் தொடங்கி வைக்கப்பட்டது. இதனுல் இன்றும் இப்பள்ளி வாசலுக்கு வருவாய் வந்து கொண்டுடிருக்கிறது. 1938 முடியுமுன் 30 மரைக்காயமார்களும் மறைந்தார்கள்.

1939 தொடக்கம் மீண்டும் வடக்கனு குடியிலுள்ளவர்கள் மேற்பார்வையில் இருந்து வந்தபோது சட்டபூர்வமாக மரைக்காயமார்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்று பொது மக்கள் கேட்டுக்கொண்டனர். இதற்கேற்ப 1942 ஜனவரி மாதத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையிலும் மட்டக்களப்பு மாகாண அதிபர் D. C. R. குணவர்தனு, நம

சிவாயம் வன்னிமை முதலியார் இருவரும் முன்பதாக இரு குறிச்சிகளிலும் இருந்து 10 மரைக்காயமார்கள் தெரிவுசெய் யப்பட்டனர். இதில் 4 பேர்கள் பதவி ஏற்க மறுத்துவிட்ட னர். ஏனைய 6 பேர்களும் பதவி ஏற்று மெத்தைப்பளிவாய லுக்குட்பட்ட காத்தான்குடி பல்கேரியாக் கண்டம் உட்பட 2ம், 3ம் குறிச்சிப் பொதுமக்கள் தங்களைப்பராமரிக்கும் மரைக்காய மார்களாக அறுவரையும் ஏற்றுக்கொண்டனர்.

நியமனம் பெற்றவர்கள் பின்வருமாறு

1. ஜனுப் M. A. ஆதம்லெப்பை ஆலிம் ஹாஜியார்
2. ,, மு. இ. மு. முகம்மதிபுருகீம் ஹாஜியார்
3. ,, அ. அசனார் லெப்பை மரைக்கார்
4. ,, உ. முகம்மது இஸ்மாயில் மரைக்கார்
5. ,, அ. மீ. அசனார் லெப்பை மரைக்கார்
6. ,, அ. ம. மீராலெப்பை மரைக்கார்

இவர்களில் முதன் 4 பேர்களும் வடக்கனு குடியையும் 5ம் ஆள் சாயக்காறன் குடியையும், 6ம் ஆள் மூக்கறகஸ்ஸா குடியையும் சேர்ந்த வர்களாகும்.

முதலாவது கூட்டத்தில் எமக்கு முன்னுள்ள 3 தலைமுறை மரைக் காயமார்கள் இப்பள்ளிவாசலுக்கு என்ன சேவைகள் செய்திருக்கிறார்களென ஆராய்ந்தோம். முன் தலைமுறையினர் தாங்கள் கடமையாற்றிய காலத்தில் பள்ளிவாசலுக்கு ஏதாவது ஒரு கட்டிடம் கட்டிக்கொடுப் பது வழக்கமாயிருந்தது. இந்நடைமுறையைப் பின்பற்றி நாங்களும் பள்ளி யைச் சுற்றி அழிந்திருந்த சொறிக்கல் மதிலை முற்றாக அகற்றி விட்டு செங்கற்களால் சூழ மதிற்சுவர் கட்டினோம்.

இப்பகுதியில் சிறுவர்களின் நலனுக்கு ஒரு பாடசாலை இல்லாக் குறையைப் போக்கவேண்டும் என்ற காரணத்தினால் மரைக்காயமார்களா கிய நாங்கள் பள்ளிக்கருகாமையில் ஒரு காணி வாங்கி, பாடசாலை அமைத்து 13 மாதங்கள் வரை ஓர் ஆசிரியர் நியமித்து நடாத்திவந் தோம். இதன்பின் அப்போதைய மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப் பினர் முதலியார் A. சின்னலெப்பை M. P. அவர்களின் முயற்சியால் 1948ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி அரசாங்கப் பாடசாலையாக அங்கீ கரித்தது, அன்று முதல் ஜனுப் M. K. M. இஸ்மாயில் அவர்களை தலைமை யாசிரியராகக் கொண்டு அரசாங்க பாடசாலையாக இயங்கத் தொடங்கி யது இந்த சிறப்பு நிகழ்ச்சியைக் கொண்டாடும் முகமாக 20-9-48ல் கௌரவ தொழில் மந்திரி மர்ஹூம் T. B. ஜாயா அவர்களின் தலைமை யின் கீழ் கிழக்கு மாகாண M. P. மார்கள் மட்டக்களப்பு மாகாண அதி பர், மாவட்ட நீதிபதி மர்ஹூம் மஹ்றூப் மற்றும் பிரமுகர்கள், ஆகியோர் கலந்து சிறப்பித்ததுடன், ஜனுப் மு. இ. மு. முகம்மது இப்ருகீம் ஹாஜி யார் அவர்களின் இல்லத்தில் ஒரு விருந்து வைபவமும் நடைபெற்றது.

எனது (மு. இ. மு.) சேவைகள்

(1) 4-4-54ல் காத்தான்குடிக்கு முதன் முதலாக மின் வெளிச்சம் வந்த காலத்தில் பள்ளி வாசலுக்கு மின் வெளிச்ச வசதி செய்ய ஒருவரும் முன் வராத காரணத்தினுல் எனது சொந்தச் செலவில் மின் வெளிச்ச வசதி செய்து கொடுத்தேன்.

(2) பள்ளி வாசலுக்கு வெளிச்ச வசதி செய்து கொடுத்ததோடு பணி முடிந்துவிடவில்லை மாதாமாதம் அதற்குரிய வரி கட்டவேண்டிய அவசியத்தின் பேரில் பொது மக்கள் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டபோது 10 பேர்கள் மட்டுமே சமுகமளித்தார்கள். மாதாமாதம் மின்வரி கட்ட மற்றப் 10 பேர்களும் ஏற்றுக் கொண்டபோது நான் 2 மாத மின்வரி கட்ட பொறுப்பேற்றுக் கொண்டேன். காலப் போக்கில் மற்றவர்கள் மின்வரி கட்ட மறந்து விட்டார்கள் போலும் இதனுல் மின் வரி மிகவும் கூடி விட்ட படியால் இது சம்பந்தமாகத் தன்னை வந்து சந்திக்கும்படி பட்டின சபைத் தலைவர் மர்ஹூம் M. I. M. காசீம் ஹாஜியார் அவர்கள் அழைத்திருந்தார். அவரைச் சந்தித்தபோது, அவர், ''பள்ளிவாசலுக்கான மின் வரி கட்டப்படாதிருக்கின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மின் தொடர்பைத் துண்டிக்கும்படி ஆலோசனை கூறி இருக்கின்றார்கள்; நான் பள்ளிவாசல் காரணமாக அப்படியான நடவடிக்கை எடுக்கவில்லை, பள்ளியையும் பார்க்கவேண்டும், அதேநேரத்தில் எனது கடமையையும் செய்ய வேண்டி இருக்கின்றது. பொது நன்மைக்காக நன்கொடை வழங்குபவர்கள் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே, நிரந்தரமாக ஒரு வருவாயைப் பெற்று இது போன்ற வரிகளைச் செலுத்துவதற்கு உங்களுக்கு ஒரு ஆலோசனை கூறுகிறேன்.

நீங்கள் பள்ளி வாசலுக்கு மின் வசதி செய்து கொடுத்ததுபோல் மாதாமாதம் அதற்கான மின் வரியை ஒழுங்காகச் செலுத்துவதற்கு வசதியாக உங்கள் கட்டிடத்தின் ஓர் அறையை மட்டும் பள்ளிவாசலுக்கு 'வக்பு' செய்யுங்கள். அல்லது பட்டின சபைக்கு எதிரிலுள்ள பள்ளி வாசல் காணியில் கடைகளை கட்டி வக்பு செய்யுங்கள் அதன் மூலம் வரும் வாடகைப் பணத்தைக் கொண்டு மின்வரி, மதரசாச் சம்பளம், மற்றும் பள்ளி வாசலுக்கு ஏற்படும் செலவுகளுக்கும் பயன்படுத்த வசதி அளிக்கும் இதன் தவாபை இம்மையிலும், மறுமையிலும் பெற்றுக்கொள்வீர்கள். பள்ளிவாசலுக்கு ஒரு வருவாயைத் தேடிக் கொடுப்பது மரைக்காயமார்களின் கடமைதானே'' என்று கூறினுர்.

இவருடைய கருத்துரைகள் எனது நெஞ்சை நெகிழ வைத்தன. இதன் பலன் பள்ளிவாசலுக்கு எதிரிலுள்ள காணியில் 6 அறைகளைக் கொண்ட கடையை நிர்மாணித்து பள்ளி வாசலுக்கு வக்பு செய்தேன்.

இதன் மூலம் கிடைக்கப்பெறும் வருமானத்தைக் கொண்டே இன்றுவரை மின்வரி, மதரசாச் சம்பளம் போன்ற செலவுகள் தடைப் படாமல் செலுத்தப்பட்டு வருகின்றன. இத்தனைக்கும் என்னைத் தூண்டிய மர்ஹூம் M. I. M. காசீம் ஹாஜியார் அவர்களை நான் என்றும் மறக்க முடியாது.

(3) இதன்பின் கடைக்குப் பின்னால் உள்ள (மைய வாடி) 'மக்பறு'வை மறித்து 250 அடி நீள, 6 அடி உயரமுள்ள ஒரு மதிற் சுவர் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று. ஜனுப்கள் C. B. காசீம், M. M. மீராசாகிபு ஆகியோரை உள்ளடக்கிய 10 பேர்கள் கொண்ட கோஷ்டியொன்று என்னை வேண்டிக்கொண்டது. இவர்களுடைய வேண்டு கோளைக் கூட நான் நிராகரிக்கவில்லை. ஜனுப் இஸ்மாயில் மேசன் என் பவரிடம் 2450/- பொருந்திக் கட்டிப் பூசிக் கொடுத்தேன்.

(4) மேலும் பள்ளிவாசல் வளவினுள் ஒரு கிணறும் கட்டி, துலாவுப், துலாக்காலும் போட்டுக் கொடுத்தேன்.

(5) நான் 1ம் குறிச்சி பாடசாலைக்கு எதிரேயுள்ள சுமார் 2 ஏக்கர் காணியை ரூபா 2200/-க்குக் கிரயமாக வாங்கி அதில் ஒரு அரிசி ஆலை போட உத்தேசித்திருந்தேன். இச் சந்தர்ப்பத்தில் நான் 1958ல் புனித ஹஜ்யாத்திரை செல்லும் நோக்கத்துடன் அரிசி ஆலைக்காக வாங் கப்பட்ட காணியை முகிதீன் மெத்தைப் பள்ளிவாசலுக்கு 'வக்பு' செய்து இதற்கான உறுதியை M A. L. காரியப்பர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும்படி ஜனுப் M. A. ஆதம் லெப்பை ஹாஜியார் அவர்களிடம் கூறிச் சென்றேன்.

ஆனால் மேற்படி காணியை ஜனுப் A. M. இப்றுகீம் அவர்கள் சுவீகரித்து 1ம் குறிச்சிப் பள்ளிவாசலுக்குக் கொடுபட்டதாக அறிந்து ஆச்சரியமடைந்தேன். தற்போதய 1ம் குறிச்சி நம்பிக்கைப் பொறுப்பா ளர்கள், உலமாக்கள், ஜமாஅத்தார்கள் ஆகியோர் மறு பரிசீலனை செய்து முகிதீன் - மெத்தைப்பள்ளி வாசலுக்குரிய காணியை சேர்த்துவிடும்படி இச் சந்தர்ப்பத்தில் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "அது வும் பள்ளி, இதுவும் பள்ளி என்றாலும் "தாயும் பிள்ளையுமானாலும் வாயும், வயிறும் வேறுதான் என்பார்களே என்பதைக் கருத்திற்கொள்க.

(6) பழைய மெத்தைப் பள்ளிவாசல் புனர் நிருமானம் செய்யப் படவேண்டுமென்ற எண்ணம் படைத்த பொதுமக்கள், மரைக்காயமார் கள் ஒன்றிணைந்து அதற்கான பண வசூல் ஆரம்பித்தபோது மரைக்காய மார்களிடமிருந்து தலைக்கு 3000 தொடக்கம் 10,000 வரை வசூலிக்கப் படவேண்டும் என நிர்ணயித்தார்கள். எனது விசயத்தில் மட்டும் ஒரு படி உயர்த்தி ரூபா 15,000 வசூல் போடவேண்டுமெனக் கேட்டார்கள். காரணம் கேட்டபோது பள்ளியை உடைத்துக் கட்டவேண்டும் என்று முதல் கூறியவர் நீங்கள் எனவே போடவேண்டும் என்று கூறினார்கள். நானும் மனச் சந்தோஷத்தோடு தலையோடு வந்தது தலைப்பாகையோடு போகட்டுமே என்று நினைத்து ரூபா 15,125/- எனது நன்கொடையாக வழங்கினேன்.

5வது தலைமுறையினரும் பள்ளிவாசல் புனருத்தாரணமும்

4 தலைமுறை மரைக்காயமார்களைப் பின்பற்றி 5 ஆவது தலைமுறையில் பழைய மரைக்காயமார்கள் மூவரை உள்ளடக்கிய 16 பேர் களைக் கொண்ட புதிய மரைக்காயமார்கள் 1964ம் ஆண்டு தொடக்கம் தெரிவு செய்யப்பட்டது.

அவர்களாவன:-

1. ஜனாப் M. A. ஆதம்லெப்பை ஆலிம் ஹாஜியார்
2. ,, மு. இ. மு. முகம்மதிபுருகீம் ஹாஜியார்
3. ,, அ. ம. மீராலெப்பை மரைக்கார்
(இவர்கள் பழைய மரைக்காயமார்கள்)
4. ,, ஆ. ம. முகம்மது இஸ்மாயில் ஹாஜியார்
5. ,, A. L. M. இஸ்மாயில்
6. ,, ஆ. ம அகமது மீராசாகிபு ஹாஜியார்
7. ,, உ. ப. முகம்மது அப்துல்காதர் ஆலிம் ஹாஜியார்
8. ,, P. M. முகம்மது அபூபக்கர் ஹாஜியார்
9. ,, K. உமறு லெப்பை
10. ,, M. M. முகம்மதலியார் ஹாஜியார்
11. ,, H. M. A. றசீது
12. ,, A. P. M. நூகுலெப்பை ஹாஜியார்
13. ,, M. முகையதீன்பாவா ஹாஜியார்
14. ,, S. L. M. இஸ்மாயில்
15. ,, A. K. மீராசாகிபு ஹாஜியார்
16. ,, மீ. தம்பிலெவ்வை ஹாஜியார்

பள்ளி வாசலுக்கு மார்கட் கட்ட 1000/- கொடுப்பவர்கள் மட்டும் மரைக்காயமார்களாக வரலாம் என்ற நிபந்தனையின் பேரில் மேற் கூறிய 13 பேர்களும் மரைக்காயமார்களாக வந்தனர்.

பழைய மூன்று மரைக்காயமார்களும் வயது முதிர்ந்த நிலையில் இருப்பதால் துடிப்பான முறையில் கருமங்கள் ஆற்றுவார்கள் என்ற நம்பிக் கையிலேயே மேலும் 13 மரைக்காயமார்கள் தெரிவு செய்யப்பட்டது. இவர்களது பதவி காலத்தில் குறிப்பிடத்தக்க எந்த ஒரு வேலையும் இதற்கு முன்னுள்ள மரைக்காயமார்களை நினைவு கூறச் செய்ததுபோல் இவர்கள் செய்யாதது வெளிப்படை உண்மையாகும்.

இந்நிலையில் 1966ம் ஆண்டு றமழான் மாதத் தொடக்கத்தில் பள்ளி வாசலின் அழிந்த நிலையில் இருந்த கூரை, தூண், வளை முதலிய வைகளின் நிலையை கவனித்த யான் எமது மூதாதையர் கட்டி முடித்த பள்ளிவாசல் ஒரு நூற்றாண்டைக் கடந்துவிட்டது. நமது பக்கத்தேயுள்ள

பல பள்ளிவாசல்களும் புணருத்தாரணம் செய்யப் பட்டு விட்டதே. நமது பள்ளிவாசலைப் புணருத்தாரணம் செய்ய நமது மரைக்காயமார்கள் எவரும் முன்வரவில்லையே என்ற ஏக்கத்தோடு அப்போதய தலைவர் ஜனாப் M. A. ஆதம்லெப்பை ஆலிம் ஹாஜியார் அவர்களிடம் கதைத்தேன்.

1942ம் ஆண்டு தொடக்கம் தெரிவு செய்யப்பட்ட 6 மரைக்காயமார்களும் இப்பள்ளிவாசலை அவ்வப்போது கவனித்துத் தேவையான ஒழுங்குகளைச் செய்யும் பொறுப்பை தங்களிடம் ஒப்படைத்து அதற்காகத் தேவைப்படும் பொருளாதாரத்தை நாங்கள் தருவதாக வாக்களித்து இதுவரை நாம் நடாத்தி வந்தோம். நீங்களும் ஊரோடிருந்த படியால் பெருமனதுடன் பொறுப்பேற்று செவ்வனே பணிகளைச் செய்தமைக்காக இன்றும் நன்றி கூறக் சடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். இன்றைய நிலையில் இப்பள்ளிவாசலை உடைத்துப் புதுப்பித்துக் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் நாம் எல்லோரும் இதில் தீவிர சிரத்தை காட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

இதற்கு ஜனாப் ஆதம்லெப்பை ஆலிம் ஹாஜியார் அவர்களும் ஜனாப் ஆ. ம. அகமது மீராசாஹிபு ஹாஜியார் அவர்களும் மறுத்துவிட்டார்கள். இவர்கள் மட்டுமல்ல ஏனைய மரைக்காயமார்களும் இதே நிலைதான். இந்நிலையில் நொந்துபோன மனத்துடன் 2ம் வட்டார பட்டின ஆட்சி மன்ற உறுப்பினர் (தற்போதய தலைவர்) ஜனாப் A. அகமது லெப்பை J. P. அவர்களுடன் தொடர்பு கொண்டு நமது அப்பாவும், பூட்டனும் 115 ஆண்டுகளுக்கு முன் கட்டி எழுப்பிய அல்லாஹ்வுடைய திருவீடாகிய ஜும்மாப் பள்ளி வாசலை இன்றைய நிலையில் உடைத்துக் கட்ட முயற்சி மேற்கொள்ளாவிட்டால் எந்தக் காலத்திலும், யாரும் புதுப்பித்துக்கட்ட முற்படமாட்டார்கள். இந்நிலை நீடிக்குமானால் பள்ளியின் நிலை பரிதாபத்துக்குரியதாகிவிடும். நம் முதாதையர்களோ பள்ளிவாசலை அப்போது கட்டத் தொடங்கிய போது துணிவுடன் யானை, கரடி, புலி முதலிய விலங்கினங்களைக் கொண்ட காட்டில் அலைந்து மரங்களை வெட்டி, வாகன வசதியற்ற காலத்திலும் கஷ்டத்துடன் பள்ளிவாசலைக் கட்டி முடித்தார்களே அவர்களின் வழி வந்த நாம் துணிவற்ற நிலையில் பின் நிற்கலாமா? ஏசு பெருமான் சொன்னதுபோல ''தட்டுங்கள் திறக்கப்படும் கேழுங்கள் கொடுக்கப்படும் தேடுங்கள் கண்டுகொள்வீர்கள்'' என்று கூறினேன்.

இதைக் கேட்ட ஜனாப் A அகமது லெப்பை J. P. அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு ''இன்சா அல்லாஹ்'' இப்பணியைத் தொடங்கிச் செய்வோம் என்று கூறி என்னை உற்சாகப்படுத்தினர்.

இதன் பின் பொறியியல் அத்தியட்சகர் ஜனாப் நெய்னா மரைக்கார் அவர்களை நேரில் சந்தித்து, அழைத்து வந்து பள்ளிவாசலை உடைத்துப் புதுப்பித்துக் கட்ட ஒரு படம் வரைந்து தரும்படி வேண்டினேன். அவர் வந்து பார்த்த பின் உரிய படத்தை வரைந்து தந்தார். இதைப் பட்டின ஆட்சி மன்றத்திலும் கொடுத்து அங்கீகாரம் பெற்றதன்பின்

இரண்டரை வருடகாலம் சக மரைக்காயமார்களை என்னால் முடியுமான வரை தெண்டித்தும் அவர்கள் ஒத்துழைப்புத்தர மறுத்து விட்டார்கள்.

இந்நிலையை விளக்கிப் பொது மக்களுக்கு 7-6-68ல் புத்தக உருவில் ஒரு பிரசுரம் வெளியிட்டேன். இதன் பலனாக 15-6-68ல் மெத்தைப்பள்ளி விருந்தாவில் அன்றைய ஜமா அத்தார்களும், சமுகங் கொடுத்த மரைக்காயமார்களும் சேர்ந்து நீங்கள் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்பதானால் இப்பள்ளிவாசலைக் கட்ட சகல ஒத்துழைப்பும் தருவோம் என்று சொன்னார்கள். அப்போது அவர்களுடைய வேண்டுகோளை முற்றாக நிராகரித்து விட்டேன். மீண்டும் 21-6-68ல் ஜும்மாவுக்குப் பிறகு கூட்டப்பட்ட ஜமா அத்தார்களும் மரைக்காயமார்களும் என்னையே தலைவராக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். இச் சந்தர்ப்பத்திலும் இவர்களுடைய பேச்சை உதாசீனப் படுத்தினால் என்றுமே பள்ளிவாசல் உடைத்துக் கட்டப்படமாட்டாது என்பதை உணர்ந்த நான் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ள இணக்கம் தெரிவித்தேன். அன்று ஜனாப்களான A. அகமது லெப்பை J. P., P. M. முகம்மது அபூபக்கர் ஹாஜியார் A. P. M. நூகு லெப்பை ஹாஜியார், ஆகியோர்கள் என்னோடு தனித்துப் பேசும்போது நாம் நான்குபேர் என்றாலும் இறுதிவரை ஒத்துழைத்துப் பள்ளிவாசலைக் கட்டி முடிப்போம் என்று திடசங்கற்பம் செய்துகொண்டோம்.

இதற்கேற்ப பள்ளிவாசல் கட்டட நிதியை ஆரம்பிக்கு முகமாக முதன்முதல் 1-8-68ல் முதலாவது நிதியை ஜனாப் A. அகமதுலெப்பை J. P. அவர்கள் தூய எண்ணத்தோடு 'பிஸ்மிச்' சொல்லி தந்துதவினார்கள். இதைத் தொடர்ந்து வசூல் அறவிட ஆரம்பித்தோம். 28-2-69 வரை சுமார் 50,000 ரூபா வரை வசூலித்தோம்.

இடையே 14-8-68ல் செயலாளராகக் கடமையாற்றிய ஜனாப் M. M. முகம்மதலி ஹாஜியார் தமது செயலாளர் பதவியிலிருந்து தாமாக விலகிக்கொண்டார். காரணம்; சக மரைக்காயமார்களான ஜனாப்கள் P. M. M. A. ஹாஜியார், A. P. M. ஹாஜியார் ஆகியோர்கள் வழங்கிய வசூல்போல் நீங்களும் கொடுக்கவேண்டும் என்று கூறியபோது அதை மறுத்து அதன் அரைவாசிதான் தருவேன் என்று காரணம் கூறி விலகி விட்டார். இத்துடன் நில்லாது பொலிசிலும் இணக்க சபையிலும் எனக்குத் தொந்தரவு தருமுகமாக வீண் குற்றச்சாட்டுக்களைக் கூறி பள்ளிவாசல் வேலையில் ஈடுபட்டிருந்த எனது நேரத்தை வீணாக்கினார். இவர் செயலாளராக 1 மாதமும் 23 நாளுமே கடமை புரிந்தார்.

இவரைத் தொடர்ந்து 29-9-69ல் தனாதிகாரியாகக் கடமையாற்றிய ஜனாப் A P. M. நூகுலெப்பை ஹாஜியார் பதவி வகித்த 3 மாதமும், 8 நாட்களிலும் பின் பதவி துறந்துவிட்டார். காரணம் கேட்டபோது "நாங்க எல்லாம் பிசினிஸ் காறங்க, உங்களோட இரவு பகலாக பள்ளிவாசல் வேலையில் ஈடுபட அவகாசமில்லை" என்று கூறினார்

சேகரிக்கப்பட்ட பணத்திலிருந்து கட்டிட வேலைக்கு ஆரம்பத்தில் தேவையான உபகரணங்களை வாங்கி சேகரித்தோம். பள்ளிவாசலைச்

சார்ந்த உலமாக்கள் பலரை அணுகி நமது பள்ளிவாசலை உடைக்கவேண்டுமே என்பது பற்றி ஆலோசித்தேன். இச்சந்தர்ப்பத்தில் ஆலிம் ஹாஜியார் ஒருவர் என்னவாம் மெத்தைப் பள்ளியை உடைக்கவாம் இந்த பதுவாவில் அகப்பட்டுக் கொள்ளாதிங்க' என்று கூறினாராம். இதைக் கேட்ட நண்பர்கள் சிலர் பயந்து அடங்கி விட்டார்கள். நான் இதைக் கேள்விப்பட்டதும் மட்டக்களப்புக்கு வந்து காயல்பட்டணம் கண்ணுடி ஆலிம் சாஹிப் அவர்களை அணுகி மெத்தைப்பள்ளி வாசலைக் கட்ட பணமும் வசூலித்து, சாமான்களும் வாங்கி விட்டோம் இடையே உலமாக்கள் முட்டுக்கட்டை போடுகிறார்களே என்ன செய்யலாம் என்று கேட்டேன்.

உடனே அவர் ஒரு கடிதமெழுதி எனக்குத் தந்தார். அதில் பின் வருமாறு இருந்தது.

''ஆகா உலமாக்கள் அவர்களாலே அழிவார்கள் எந்தன் உம்மெத்தென சஹான் உரைப்படி உரைத்தார் எங்கள் சங்கை முகம்மது நபி இறசூல்'' (சாம் ஒலி அப்பா அவர்களின் பெரிய ஹதீஸ் மாணிக்கமாலை பக்கம் 11 பாடல் 77)

14-3-69ல் ஜும்மாவின்பின் ஜமா அத்தார்களின் கூட்டத்தில் பள்ளிவாசலை உடைத்துக் கட்டப்போகிறோம் ஏதும் தடை இருக்கின்றதா? என்று கேட்டபோது எந்த ஒரு தடையும் இல்லவே இல்லை என்றார்கள். மன்னன் சொல்லுக்கு மறுசொல் ஒன்றுமில்லை என்பார்களே அது போல மர்ஹூம் சங்கைக்குரிய அஸ்செய்யிது சக்காபு மௌலானா அவர்களின் பாத்திஹாவுடன் முதன்முதல் அவர்களின் திருக்கரத்தினாலேயே ஒரு மின் பல்லைக் களட்டி வேலையை ஆரம்பித்து வைத்தார்கள்.

1966 முதல் 1968 வரையிலான 2½ வருடகாலங்கள் முற்றாகப் பள்ளி வாசல் புதுப்பித்துக் கட்டுவதை மறுத்து வந்த இரு ஹாஜுல் ஹறமைன்களான ஜனுப் M. A. ஆதம்லெப்பை ஆலிம், ஜனுப் ஆ. ம. அகமது மீராசாகிபு இருவரும் இச்சந்தர்ப்பத்தில் முன்னணியில் நின்று பள்ளியை உடைக்கும் வேலையில் துரித ஈடுபாடு கொண்டார்கள். ''நிண்டா அபூ ஜஹில் ஈமான் கொண்டால் உமறு கத்தாப் ராஜா'' என்பது போல முதல் பள்ளிவாசல் கட்ட மறுத்தவர்கள் பின்னால் மிக உற்சாகத்தோடு உதவினார்கள். இது ''பாட்டு வாச்சால் கிழவியும் பாடுவா'' என்பதுபோல நான் கேட்டேன் கடந்த 2½ ஆண்டுகளாக நான் எவ்வளவோ சொல்லியும் என் சொல்லை மதிக்காத நீங்கள் இன்று காட்டும் உங்கள் ஊக்கத்தை அன்று காட்டியிருந்தால் இப் பள்ளி வாசலை குறைந்த செலவில் வெளியூர் வசூல்களின்றி மூன்று மாடிக் கட்டிடமாக கட்டி முடித்திருக்கலாம். இதற்காகத்தான் இந்தியாக் காறங்க சொல்லுவாங்க ''வருமுன் அறிவானும் செட்டி, வந்தபின் அறிவானும் துலுக்கன்''

பள்ளி கட்டத் தொடங்குமுதல் வெளியூர்களில் போய் பணம் வசூலிப்பதில்லை என்று தற்பெருமை பேசினேம். ''முன் எண்ணம் சத்

துரோகி'' ''ஏறமாட்டேன் என்ற கடப்பு ஏறவும் வரும் குடிக்கமாட்டேன் என்ற கிணத்துத் தண்ணி குடிக்கவும் வரும்'' என்று சொன்னேன்.

பள்ளிவாசல் கட்டிடவேலை நடந்து வரும்போது பணம் பற்றுக் குறை ஏற்பட்டது தவிர, 21-6-68ல் ஜனுப்களான P. M. முகம்மது அபூபக்கர் ஹாஜியார் A. P. M. நூகுலெப்பை ஹாஜியார் ஆகியோர் ஒத்துழைப்புத் தரவும் மறுத்து விட்டார்கள்,

இப்படியான இக்கட்டான நிலையில் நான் ஜனுப் A. அகமது லெப்பை J. P. அவர்களுடன் இணைந்து ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்ட திடசங்கற்பத்திற்கிணங்க ஆரம்ப முதல் இன்றுவரை பள்ளிவாசலைக் கட்டி முடித்ததுடன் அதற்கான பணிகளையும் செய்து வருகின்றோம். பள்ளிவேலை ஆரம்பித்ததில் இருந்து அதைக் கட்டிக் குடி புகும்வரை இரவில் தூக்கமாத்திரை போட்டும் தூக்கம் வராத ஒருவனுக இருந்தேன் என்றால் என் நிலையை நீங்களே புரிந்துகொள்வீர்கள்.

மரைக்காயமார்கள், மாஸ்டர்மார்கள், பொதுமக்கள் ஆகியோர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் தாங்கள் போட்ட முழு வசூல் தொகையையும் தந்துதவினுர்கள். ஏனைய இரண்டு பங்கினரும் அரை குறையாகவே பணம் தந்தபடியால் உத்தேசப்படி பள்ளிவாயல் பூரணத்துவம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது. மரைக்காயமார்கள் வசூல் போட்டவர்களிடம் பன்முறை போய் அவர்கள் போட்டதில் மிகுதிப் பணத்தை கேட்டும் நடை தளர்ந்துவிட்டார்கள், இந்நிலையில் நான் பொதுமக்களுக்கு ஜும்மாவில் வாசிக்குமாறு ஒரு கடிதத்தை எழுதி கதீப் அவர்களிடம் கொடுத்தேன். ஆனுல் இதை வாசிக்கக் கூடாதென ஜனுப் P. M. முகம்மது அபூபக்கர் ஹாஜியார் தடுத்தார். இதனுல் கடிதம் வாசிக்க வில்லை ஆனுல் அக்கடிதம் பின்வருமாறு.

அன்புப் பொதுமக்களே!

உங்களுடைய ஒத்துழைப்புடனும், பண உதவியுடனும் இதுவரை பள்ளிவாசலைக் கட்டி வந்தோம். வசூலித்த பணமும், செய்து முடிந்த வேலைகளும் இன்றுடன் சரிசமனுகி விட்டன. மேற்கொண்டு பள்ளிவாசல் வேலை தொடங்குவதாயின் நீங்கள் எழுதிய வசூலின் பாக்கியைத் தந்து முடித்தால் மாத்திரமே சாத்தியமாகும். ஆகவே மரைக்காயமார்கள், உலமாக்கள், பொதுமக்கள் ஆகியோர்களைக் கொண்ட வசூல் கமிட்டியினர் பள்ளிவாசலில் தினமும் இருப்பார்கள். தயவுசெய்து இன்னும் காலதாமதப் படுத்தாது தங்களுக்குரிய பாக்கி வசூலைச் செலுத்தி அதற்கான ரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். இப்பணத்தைத் தருவதில் ஏதாவது பிரச்சினை இருந்தாலும் தெரிவியுங்கள். இது பள்ளிவாசல் கட்டுவது பற்றி மறு பரிசீலனை செய்ய உதவியாக இருக்கும்.

இதன்பின் நான் ஜனுப் A. அகமதுலெப்பை J P. அவர்களிடம்; தொடர்ந்து மரைக்காயமார், மாஸ்டர்மார், பொதுமக்களை பணம் கேட்டு கஷ்டப்படுத்துவது நமக்கும் நல்லாயில்லை. அவர்களுக்கும் சிரம

மாய் இருக்கின்றது. ஒரு கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒன்றுபோல் இருக்குமோ ஆகவே வெளியூரிலே போய் வசூல் பார்த்தால் என்ன என்று கேட்டபோது, ஜனுப் அகமது லெப்பை சொன்னூர்கள். ''மத்ரசதுல் பலாஹ்'' வசூல் அறவிடப் போவதற்குரிய ஆயத்தங்கள் செய்து கார் ஒழுங்கும் செய்தாகிவிட்டது. நான் போக மறுத்தால் அவர்களும் குறை சொல்லுவார்கள் என்றூர். அதற்கு நான், மதரசா கட்டி முடிந்து குடி போயும் விட்டார்கள். பெட்டி நிறையப் பணமும் வைத்திருக்கிறூர்கள். ''நம்ம பள்ளிவாசல் ஓடிவந்த கப்பல் திசை தெரியாமல் கற்பாறையில் மேல் ஏறி நிற்கிறதே'' இத்தறுவாயில் எப்படியாவது கப்பலைக் களட்டி எடுத்தால்தானே ஒரு துறைமுகம் காணலாம். இதைப் பராமுகமாக விடுவது சரியோ. இந்நிலை தொடர்ந்தால் அல்லாஹ் நம்மளைக் கேட்க மாட்டானே கட்ட முடியாத நாம் பள்ளியை ஏன் உடைத்தோம் என்று கேட்போருக்கு என்ன பதில் சொல்வது? மற்றைய மரைக்காயமார்களிடம் கேட்டால் எங்களுக்கு எதுவும் தெரியாது பள்ளி உடைக்க நாங்கள் கிட்டவும் போகவில்லை என்று சொல்வார்கள். மறுமையில் கேள்வி கணக்குக்குத் தப்பிக் கொள்வார்கள். நாமள் மௌத்தானவுடன் நம்முட பள்ளியைப் பற்றிக் கேட்டால் என்ன பதிலைச் சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியும் என்று கூறினேன்.

இதைக்கேட்ட ஜனுப் அகமதுலெவ்வை அவர்கள் அப்போதைய மதரசாத் தலைவர் காளி ஜனுப் S. M. M. முஸ்தபா J. P. அவர்களைக் கண்டு நிலைமையைச் சொல்லும்படி சொன்னூர். அவரிடம் இது சம்பந்தமாகக் கதைத்து நமது நோக்கத்துக்கு அவருடைய ஒத்துழைப்பையும் தருவதாக ஏற்றுக் கொண்டார். வெளியூர்களில் போய் வசூலித்துப் பள்ளிவாசல் கட்டுவதில்லை என்ற முன்னைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்வான் வேண்டி பொதுமக்களை அழைத்து நிலைமையை தெளிவு படுத்தியதும் அவர்கள் முன்னையத் தீர்மானத்தை நிராகரித்து புதியதாய் எந்த நாட்டில் முஸ்லிம்கள் இருந்தாலும் பணம் வசூலித்து பள்ளி வாசலைக் கட்டி முடிக்க ஏகோபித்த முடிவு வழங்கினூர்கள்.

இதைத் தொடர்ந்து மரைக்காயமார்களில் ஜனுப்களான P. M. முகம்மது அபூபக்கர் ஹாஜியார், A. P. M. நூகுலெப்பை ஹாஜியார், M. M. முகம்மதலியார் ஹாஜியார் ஆகியோர் தவிர்ந்த 13 மரைக்காயமார்களினதும் ஒத்துழைப்புடன் மரைக்காயமார், உலமாக்கள், ஜமாஅத்தார் ஆகியோரில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வசூல் கமிட்டியினர் இரு கார்கள், ஒரு லொறி ஆகிய வாகனங்கள் மூலமாக பள்ளிவாசல் பெரிய உண்டியலுடனும் கொழும்பு தொடக்கம் இலங்கையில் முஸ்லிம் வசிக்கும் ஏனைய பாகங்களுக்கெல்லாம் சென்று 115 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருந்த காத்தான்குடி நடுத்தெரு மெத்தைப்பள்ளிவாசலை புதுப்பித்து கட்டுவதற்காக உடைத்துள்ளோம். இது போன்ற ஒரு பெரிய பள்ளிவாசல் இலங்கையில் எப்பகுதியிலும் இல்லை. குறிப்பாக இது போன்ற ஒரு பள்ளி தென்னகத்தில் கூட காண்பதரிது. இப்பள்ளி வாசலின் பூர்வீகம் இலங்கைக்கு வந்த இந்தியர்களில் பெரும்பா

லானவர்கள் நன்கறிந்தவர்கள். இப்பள்ளி வாசலைப் புணர் நிர்மானம் செய்யத் தீர்மானித்தபோது முதலில் எங்களது ஊர்ப் பொதுமக்களிடமிருந்தே பணம் வசூலித்துக் கட்டுவதாகத் தீர்மானித்தோம். ஆனுல் எங்களது மரைக்காயர்மார்களிடையே ஏற்பட்ட பிளவு காரணமாக திட்டமிட்டபடி செய்ய முடியாமல் பள்ளிவாயல் கட்டிட வேலைகள் அரைவாசியில் தடைபட்ட நிலையில் இருக்கின்றது. இதன் காரணமாகவே எங்களது மரைக்காயர்மார்களில் நானும், ஜனுப் எம். ஏ. ஆதம்லெவ்வை ஹாஜியார் அவர்களும், ஜனுப் ஏ. அகமது லெவ்வை ஜே. பி. அவர்களும் ஜனுப் எஸ். எம். எம். முஸ்தபா ஜே. பி. அவர்களும், ஜனுப் ஈ. ஏ. அகமது லெவ்வை ஆலிம் ஹாஜி (ஓடக்கரை) அவர்களும், ஜனுப் ஆ. ம. முகம்மது இஸ்மாயில் மரைக்காயர் ஹாஜி அவர்களும் ஜனுப் உ. ப. முகம்மதப்துல் காதர் ஆலிம் ஹாஜி அவர்களும், கதீப் அப்துல் சலாம் ஆலிம் அவர்களும், காசிம்பாவா மரைக்காயர் முகம்மது இஸ்மாயில் அவர்களும் சேர்ந்து வந்துள்ளோம் என்று பல வெளியூர் முஸ்லிம் தனவந்தர்களிடம் கூறி விடயத்தை விளக்கினேம். இவ்வாறு நாங்கள் சந்தித்த பல தனவந்தர்கள் எங்களை ஓரளவு அறிந்தவர்களாக இருந்ததனுலும்; சிலர் பள்ளிவாசல் நிலையை நேரிலேயே வந்து பார்வையிட்டு இருந்ததனுலும் எங்களது பேச்சை செவிமடுத்து உண்மையென உணர்ந்து உடனேயே நன்கொடைப் பணங்களை வழங்கியும், நாங்கள் கொண்டு சென்ற உண்டியலில் பணங்களைப் போட்டு நிரப்பியும் உதவினுர்கள். இவ்வாறு கிடைத்த பணங்களுக்கு உடனேயே பற்றுச் சீட்டு வழங்கியும், உண்டியலில் கிடைத்த பணத்தை உண்டியல் வரவென்றும் கணக்கு வைத்தோம்.

இவற்றின் வரவு செலவு விபரங்கள் இதன்கீழே விபரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிடைத்த பெருந்தொகையான பணத்தை வசூல் கமிட்டியினர் என்னிடமே ஒப்படைத்தது.

என்னையே முன்னின்று அல்லாஹ்வின் இப் பெரும் பணியைச் செய்து முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இப் பெரும் பணியை என்னுல் பொறுப்பேற்க முடியாதவனுக நான் இருந்தபோதும், வசூல் கமிட்டியினரின் வேண்டுகோளின் பேரிலும், அவர்களும் பொதுமக்களும் என்மீது கொண்டுள்ள நம்பிக்கையின் பேரிலும் ''ஆண்டவனே உனது இப் பெரும்பணியை வெற்றியுடன் செய்து முடிக்க எனக்கு வல்லமையைத் தந்தருள்'' என்று பிரார்த்தித்துக்கொண்டு இப்புனித பணியை ஏற்றுக்கொண்டேன் இச்சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு சரித்திரம் நினைவிற்கு வந்தது இப் பரந்த உலகத்தை ஒரே கொடியின் கீழ் ஆண்டு வந்த நான்கு மன்னர்களில் ஒருவரான சுலைமான் நபியிடம் ஒரு ஊர்க் குருவி வந்து உங்களுடைய பெரிய இராட்சியத்தைச் சிறிய ஊர்குருவியான என்னுல் அப்படியே கவிழ்த்துவிட முடியும் என்று சொன்னது. இதைக்கேட்ட சுலைமான் நபி அவர்கள் அது எப்படி முடியும்? என்று கேட்டார்கள். அது எப்படியென்றுல் பள்ளி வாசலில் உள்ள ஒரு துரும்பை எடுத்து வந்து உங்களுடைய கோட்டையில் சொருகி விட்டேனென்றுல் உங்களுடைய கோட்டையும், இராட்சியமும் அப்படியே கவிழ்ந்து பாழாகிவிடும்

அந்த நினைவுடன் கோயிற் சொத்து குடியைக் கெடுக்கும் என்னும் நம் நாட்டுப் பழமொழியையும் மனதிலிருத்தி, பள்ளிவாயல் பொருட்க ளில் ஒரு துரும்பாவது, ஒரு சதமாவது என்னிடம் வந்து சேராமலும், மிகக் கவனமாக அவற்றைகையாண்டு பள்ளி வாயல் வேலைகளைக் கவனித்து வந்தேன் தவிர எனது சொந்தப் பணத்திலிருந்தும் ஆயிரக் கணக்கான ரூபாய்களும் எவ்விதமான கணக்குகளும் எழுதாமல் பள்ளிவாயல் தேவைக்கு எடுத்தெடுத்து, செலவு செய்தேன் ''நீங்கள், அப்படி என்ன செலவு செய்தீர் கள்'' என்று யோசிப்பீர்கள். 7-6-68 ல் புத்தக உருவில் 1000 (ஆயிரம்) நோட்டீஸ் அடித்து வெளியிட்டேன் அப்புத்தகத்தில் 12 ம் பக்கத்தில் வரவு செலவு விபரங்களைப் பார்த்துக் கொள்ளலாம். இதைவிட, இன் னும் கணக்கு எழுதாமல் பல செலவுகளையும் பள்ளி வாயலுக்காக செய் துள்ளேன்.

''வ அம்மாபி நிஃமத்தி றப்பிக்க பகத்திது'' (மேலும் உமக்கு இறைவன் அளித்திருக்கும் அருட்கொடைகளைப் பிறருக்குச் சொல்லிக் காட் டுவீராக) இவ்வாறு எனது உடல், பொருள் ஆவி அனைத்தையும் அர்ப ணித்து, இரவு, பகல், மழை, வெயில் பாராது பள்ளி வாயல் வேலைக ளைக் கவனித்துக் கட்டி முடித்து என்னிடம் ஒப்படைத்த திருப்பணியைச் செய்து முடித்துள்ளேன். ''அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்''

காத்தான்குடியில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் இப் பள்ளி வாயலை உடைத்து கட்டி முடிப்பார்கள் என்று பெரும்பாலும் நம்பவே இல்லை ஜனாப் ஹாஜி E. A. அகமது லெப்பை ஆலிம் (ஓடக்கரை) அவர் களிடம், மர்ஹூம் மதிப்புக்குரிய செய்யிது சக்காப்பு மௌலானா அவர் களும், மர்ஹூம் மதிப்புக்குரிய முன்னாள் காதியாக இருந்த கண்ணாடி மௌ லானா அவர்களும், இப்பள்ளி வாயலை உடைக்கத் தொடங்கி இருக்கின்றாரே கட்டி முடித்து ஒப்பேத்துவாரா என்று கேட்ட போது, ''நானும் சொல்லிப் பார்த்தேன், கேளாமல் பிடிவாதமாகத் துணிந்து நிற்கிறார்'' என்று கூறி விட்டதாகச் சொன்னார்கள் இப்புனித வேலையின் தொடக்கத்தில் காத் தான்குடி கமக்காரப் போடியார் ஒருவர் சொன்னாராம், ''எல்லா நாம் பனும் ஓடுதென்று வகுத்து நாம்பனும் வாகலைக்கிளப்பிக்கொண்டு ஓடுதாம்' என்று பழமொழி கூறி பரிகாசம் செய்தாராம். இன்னுமொருவர், பள்ளி வாசல் கட்டிட வேலை அரை வாசியில் இருக்கும் போது ''கூரை போட்டு முடிக்கவும் மாட்டார் வெளியூர் போய் வசூல் எடுத்து வரவும் மாட்டார் என்று பந்தயம் போட்டார்கள். இவர்களுடைய பந்தயம், பரிகாசம், சவால் எல்லாமே ஆண்டவன் உதவியால் பின்தங்கி விட்டன.

எனது மச்சான் ஜனாப் ஆ. ம. ஹாஜியார் அவர்களை வசூலுக்குப் போக அழைத்த போது அவர் மறுத்து விட்டார். அவர்கள் என்னுடன் ஒத்துழைத்து வந்திருந்தால், எனது வேலைப் பொறுப்புகள் அநேகம் அவர்க ளிடமே ஒப்படைத்திருப்பேன். அவர் ஒத்துழையாததன் காரணமாக நான் ரொம்பக் கஷ்டப்பட்டுள்ளேன், இவ்விதமான இடையூறுகள் நேர்ந்ததை யிட்டும், தவிர மரைக்காய மார்களில் சிலரின் பிரச்சினை காரணமாக

உரிய நேரத்தில் பள்ளி வாயல் பொருட்கள் வாங்கத் தேவையான பணம் ரூபாய் 10000/ (பத்தாயிரம்) வங்கியில் இருந்து எடுக்க முடியாமல் போய் விட்டது. இதன் காரணமாக காலதாமதத்தின் பின்னரே பணம் எடுக்க முடிந்ததனல் வேலைகள் தாமதப் பட்டதோடு, அப்பொருட்களை முன் பிருந்த விலையை விட, கூடுதலான விலை கொடுத்து வாங்க வேண்டிஏற் பட்டு விட்டது. இதனுல் பள்ளி வாயல் பணம் கொஞ்சம் வீண்செலவாகி விட்டதே என்பதையிட்டே மிகவும் வருந்துகிறேன் ஆயினும், இதற்கு நான் ஆண்டவனிடத்தில் பொறுப்பாளியாக மாட்டேன் பள்ளி வாயல் வேலைகள் பாதியிலே பணமுடையால் தாமதமாகி வருகின்ற வேளையிலே என்மனம் மிகவும் வேதனைப்பட்டது இந் நிலையில் ஆண்டவன் ஒரு கூட் டத்தைக் கூட்டி ஒழுங்கு செய்ய பொது மக்களுக்கே உன்னிப்பைக் கொ டுத்தான். இதன் காரணமாக 29-12-70 ல் சுமார் 500 பேர்கள் கொண்ட ஒரு பொதுக் கூட்டம், பொது மக்களால் கூடப்பட்டு, இக் கூட்டத்தில் 16 மரைக்காயமார்களும், 2 ஜேபிகளும் கலந்து கொண்டார்கள், சங் கைக்குரிய S. H. S. S. சக்காபு மௌலான அவர்கள் தலைமை தாங்கினுர் கள். இக் கூட்டத்தில் பள்ளிவாயல் கட்டிட வேலையை மேற்கொண்டு எவ்விதம் செய்வதெனக் கேட்டபோது, அதற்கு, பள்ளிவாயலை உடைப் பதற்கு முன்னின்றவரே கட்டி முடித்தாகவேண்டுமென்று பலர் குரல் எழுப்பினுர்கள். உடனே, நான் எழுந்து அப்படியானுல், என்னைத் தவிர ஏனைய 15 மரைக்காயமார்களும் என்னையே கட்டி முடிக்குமாறு கையொ ப்பமிட்டுத் தந்தால், நான் எனது சொந்தச் செலவிலேயே கட்டி முடிக்க ஆவன செய்வேன் என்று பதிலளித்தேன். உடனேயே, மரைக்காயமார்கள் மௌளம் சாதித்தார்கள் இந்த நிகழ்ச்சி எதை நிரூபிக்கின்றது? பள்ளி வாயல் கட்டிட வேலைகள் அப்படியே ஸ்தம்பித்து சீரழிய வேண்டும் என்பதையே காட்டுகின்றது. இவ்விதமான இடையூறுகள் எதையுமே நான் ஆண்டவன் உதவியுடன் பொருட் படுத்தாமல் எடுத்துக்கொண்ட முயற்சியிலேயே கண்ணுக இருந்தேன் அதன்படியே என்மீது பொது மக்களால் கொடுக்கப்பட்ட பள்ளி வாயல் வேலைகளை என்னுல் முடிந்த ளவு செய்து முடித்துள்ளேன்.

பேரன்புமிக்க பொது மக்களே!

நான் இந்த முகைதீன் மெத்தைப்பள்ளி வரலாற்றை மிகத் தெளிவாக உங்கள் முன்னிலையில் இந்நூலின் வாயிலாக சமர்ப்பிப்பது எனது தனிப்பட்ட புகழுக்காக அல்ல. என்னிடம் நீங்கள் ஒப்படைத்த இந்தப் புனிதப் பணியை என்னுல் முடிந்தளவு செய்து முடித்துள்ளேன். என்பதைத் தெரிவிக்கவும்,, இதனைச் செய்ய எனக்கேற்பட்ட இடையூறு களையும், முட்டுக் கட்டைகளையும் நீங்கள் விளங்கிக் கொள்ளவும், இப் பள்ளி வாயலின் வரவு செலவுகளையும், அறிந்து கொள்வதற்காகவுமே யாரும் இத்துடன் இதன்கீழே என்னுல் விபரிக்கப்படும் விபரங்கள் என் னுடைய 33 வருடகால மரைக்காய சேவையின் அனுபவ வாயிலாக ஏற் பட்ட படிப்பினையைந் சேர்ந்ததாகும். இவை, எதிர்கால சந்ததியினருக்கு இப்பள்ளி வாயலின் பராமரிப்புக்கு சிறப்பாக உதவுவதோடு, குறிப்பாக

இப்பள்ளி வாயலின் வரலாற்றைத் தெளிவாக அறிந்துகொள்ள உதவு மென்றெண்ணுகிறேன்.

காத்தான்குடியில் இரண்டு ஜும்ஆப் பள்ளி வாயில்கள் மிகவும் முற்பட்ட காலங்களிலேயே தோன்றியனவாக இருப்பினும், இம் முகை தீன் மெத்தைப் பள்ளி வாயலே மிகவும் சிறப்புடனும், பிரபல்யத்துட னும் விளங்கியதென்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன.

மர்ஹூம் அ. ம. சி. அவர்கள் இருந்த காலத்தில், இந்தியாவி லும், இலங்கையிலிருந்தும் பல பெரியார்கள் அவர்களில்லத்திற்கு வந்த போது, உங்கள் பள்ளி வாயலைப் பார்க்க வேண்டுமென்று சொல்வார் கள். அப்போது, முஅத்தின்களை அழைத்து, இப் பெரியார்களை கூட்டிப் போய் மெத்தைப் பள்ளி வாயிலைக் காட்டிக் கொண்டு வருமாறு சொல்லி யனுப்பி வைப்பார்கள், அவர்கள், அனைவரும், பார்த்து வந்ததும், எங் கள் தென்னிந்தியாவிலும் உள்ள பள்ளி வாயில்களை விட சிறந்ததுதான் என்று பாராட்டிப் பேசியுள்ளார்கள். என்பது பலர் அறிந்த உண்மை யாகும்.

தவிர மௌலவி அல்-ஹாஜ் E. A. அகமது லெப்பை ஆலிம் (ஓடக்கரை) அவர்களால் கோர்வை செய்யப்பட்ட ''மின் ஹாதுஸ்ஸமதானிய்யா'' என்னும் கிரந்தத்தில் நமது முகிதீன் மெத்தைப்பள்ளி வாயிலைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுவது - இப்பள்ளி வாயி லின் பிரபல்யத்திற்கு இன்னுமோர் சிறந்த ஆதாரமாகும். இதே கிரந் தத்தில் - நமதூரில் அடங்கப்பட்டுள்ள மௌலானா செய்யது அப்துல் காதர் பாறுல் - பா - அலவி அவர்களது ஜீவிய சரித்திரம் தெளிவாகச் சித்தரிக்கப் பட்டுள்ளது. அதிலும், மெத்தைப்பள்ளி வாயில் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

மேலும் எதிர் காலத்தில் இப் பள்ளி வாயிலின் சிறப்பும், புக ழும், கருதி இங்கு செய்யவேண்டிய சில திருத்த வேலைகளைப் பொதுமக் களாகிய உங்களின் முன் நான் எடுத்துக் கூற விரும்புகின்றேன்.

அவைகளாவன:- 1. மனுக்களின் பெருக்கம் கூடிக்கொண்டு வருவதால் இன்னும் 5 வருட காலத்துக்குள் இப் பள்ளி வாயிலில் இட நெருக்கடி ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன.

எனவே, தற்போதுள்ள ஹவ்ழை மூடிவிட்டு அவ்விடத்தைத பள்ளி வாயிலுடன் சேர்த்து தொழுவதறகு வசதியாக அமைத்தல்.

2. பள்ளி வாயிலின் கிழக்குப் பக்கத்திலே போதிய இட வசதி கள் இருப்பதனால், அவ்விடத்தில் தற்போது இருப்பதைப்போன்ற ஒரு புதிய ஹவ்ழை அமைத்தல்.

3. இவ்வாறு புதிதாக அமைக்கப்படும் ஹவ்ழுக்கு மேலே பிளேட் போட்டு அதன்மேலே கூரை போடல்.

4. ஹவ்ளுக்கு மேலே புதிதாக அமைக்கப்படும் மேல் மாடியில் ஒரு மத்ரஸா அமைக்க நடவடிக்கை எடுத்தல். ஏனெனில், பல ஆயிரக் கணக்கான பெறுமதி வாய்ந்த கிதாபுகள் அழியக் கூடிய நிலையில் இருக்கின்றன. அவை நமது பள்ளி வாயிலில் உள்ள அலுமாரியில் பல வருடக் கணக்காக தேடுவாரற்று கறையானுக்கு இரையாகி வருகின்றன. இவைகளை உபயோகப் படுத்த இது ஒரு சிறந்த வழியாகும்.

5. ஜனுப் M. A. ஆதம் லெப்பை ஆலிம் ஹாஜியார் அவர்களிடம், அவர்களே பாவித்த கிதாபுகளும், அவர்களின் சகோதரர் ஜனுப் M. A. உமர் லெப்பை ஆலிம் ஹாஜியார் அவர்களுடைய கிதாபுகளும், அவர்களின் அப்பா போடியார் ஆலிம் ஆவர்களுடைய கிதாபுகளும், அத்துடன் ஜனுப் B. A. அகமது லெப்பை ஆலிம் ஹாஜியார் (ஒடக்கரை) அவர்களிடம், அவர்களுடையதும், அவர்களின் தகப்பனர் மர்ஹூம் இசுமா லெப்பை ஆலிம் அவர்கள் பாவித்த கிதாபுகளும் தேங்கிக் கொண்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் பள்ளி வாசலுக்கு அன்பளிப்பாகப் பெற முடியும்.

6. நமது ஊரிலும், ஏனைய முஸ்லிம்கள் வாழும் பல பகுதிகளிலும் மைய வாடியைச் சுற்றி மதில்கள் அமைத்திருக்க மெத்தைப் பள்ளி வாயில் பிரதான வீதி தொடக்கம் மையவாடி மட்டும் சீரழிந்த இடமாக இருப்பது வேதனைக்குரியது. எனவே, மெத்தைப்பள்ளி பிரதான வீதியிலுள்ள மையவாடியைச் சுற்றி மதிற் சுவர் அமைத்தல்

அன்புள்ள பொது மக்களே!

இவ்வருடம் 1975ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ந் திகதி மெத்தைப்பள்ளி வாயல் மரைக்காயமார்கள் சபை முடிவடைகிறதால் 1976ம் ஆண்டுக்கு புதிதாக மரைக்காய மார் தெரிவு செய்ய வேண்டி வரும் சிலவேளை தற்போது நடத்தி வரும் மரைக்காயமார்களே பார்த்து வரும் படி கமிஷனர் அவர்கள் கவனியாமல் விட்டாலும் விட்டு விடுவார் என்று நினைக்கிறேன். நமக்குப் பள்ளி வாயல் வேலைகள் கூடுதலாக மேலே கூறிய படி செய்யவேண்டிய வேலைகள் அனேகம் இருப்பதாலும் பொதுமக்களாகிய நீங்கள் இதை உணர்ந்து பொதுக் கூட்டத்தைப் போட்டு ஆலோசித்து நடவடிக்கை எடுத்து பண்டையகாலத்து முறைமைபோய் கூடுதலான மரைக்காயமார் வைத்து நடாத்திவர நான் விரும்புகிறேன். இவைகளை பொது மக்களாகிய நீங்களே புலன் செலுத்துவது உங்கள் கடமை. நீங்கள் தூண்டா விட்டால் எதிர்கால சந்ததிகள்தான் பாதிக்கப்பட்டுவிடுவார்கள்.

நான் பார்த்தளவு மெத்தைப்பள்ளி வாசலுக்கு சேர்ந்த இளம் சந்ததிகளில் மரைக்காயமாராக வரக்கூடிய தகுதி வாய்ந்தவர்கள் அனேகம் இருப்பதால் கூடுதலான மரைக்காயமார்களை வைத்து பள்ளி வாசல் வேலைகளை முற்றாய் முடிப்பதற்கு எனது ஆலோசனையாகும்.

நானும், ஜனுப் ஆதம்லெவ்வை ஆலிம் ஹாஜியார் ஆகிய நாங்கள் 33 வருடங்களாக பள்ளி நிர்வாகத்தில் இருந்து விட்டோம். இன்னும் பதவிக்கு ஆசைப்படுவது சரியோ? இளஞ் சந்ததிகளே இனிமேல் மரைக்காயமாராக இருந்து சேவையாற்றி வரவேண்டுமென்பது எனது எண்ணமாகும்,

இருபதில் இளமை, முப்பதில் மூர்க்கம், நாற்பதில் நரை, 50ல் அறிவு, 60ல் சொறிவு, 70ல் எண்ணம், 80ல் ஏக்கம், 90ல் தூக்கம், 100ல் யாத்திரை என்று முன்னோர்கள் கூறுவதற்கேற்ப.

எனக்கு இன்று 80 முடிந்து 81 முடிய எட்டிப் பார்க்கின்றது. இப்படியாக இருப்பதால் இன்றைக்கு மேற் சொன்னவாறு ஏக்கத்திலும், தூக்கத்திலும் இருந்துகொண்டு வருகிறேன். ஆனதால், இளஞ் சந்ததிகளை மரைக்காயமாராக வைத்து ஒப்புக்கொடுத்துவிட்டு, விடைபெற இன்றே ஆயத்தமாக இருக்கிறேன்.

1968ம் ஆண்டு எனக்கு தலைவர் பதவி கிடைத்த அன்று தொட்டு நான் ஓடர் போடாமல் கூட்டம் போடப்பட்டது கிடையாது. நான் கூட்டங்களுக்குச் சமுகம் கொடுக்காமல் விட்டதுமில்லை.

11-2-73ல் முக்கியமான கூட்டம் வருமாறு என்னை சில மரைக்காயமார்கள் அழைத்தார்கள். அப்படி இருக்கும் தறுவாயில் அரிசிக்கடை ஜனுப் M. M. முகம்மது அபூபக்கர் அவர்கள் வந்து சொன்னார்கள்:- "S. L. M. இஸ்மாயில் (மரைக்கார்) சொன்னதாக இன்றிரவைக்குப் பள்ளி வாசலில் மரைக்காயமார் கூட்டம் வைத்து உங்களுக்கு சதித்திட்டம் போடுவதற்கு 3 மரைக்காயமார்கள் துணிந்து நிற்கின்றார்கள். ஆகவே, உங்களை அக்கூட்டத்திற்கு போக வேண்டாமென என்னிடம் சொல்வதற்காக எனது வீட்டுக்குத் தேடி வந்திருக்கின்றார். அப்போது நான் வீட்டிலில்லை. மர்ஹூம் மதிப்புக்குரிய சக்காபு மௌலானு அவர்கள் சுகயீனமாக இருந்தபடியால் அவர்களைக் காண அவர்களில்லம் சென்றிருந்தேன் அங்கு, என்னைத் தேடி வந்து, அவ்விடத்தில் வைத்து என்னைத் தனியாக அழைத்து மேற்கண்டவாறு கூறினர். அதனுல் நான் போகவில்லை.

அவர்கள் கூட்டம் நடத்தி மெஜாரிட்டி இல்லாதபடியால் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பிரயோசன மற்றதாகி விட்டதென்பதைக் கேள்விப்பட்டேன். இந்த 3 மரைக்காயமார்களுக்கும் நான் என்ன குற்றம் குறை செய்தேன் என்பதை இரவு பகலாக முளிச்ச முளிச்ச கண்ணுக்கெல்லாம் நினைத்துப் பார்க்கின்றேன். சதித்திட்டம் போடக்கூடிய அளவுக்கு நான் இவர்களுக்கோ அல்லது இவர்களின் அழைப்புக்கு சமுகம் கொடுத்தவர்களுக்கோ ஒரு அனியாயமும் செய்யவில்லை, நினைக்கவுமில்லை என்பதை உறுதியாகச் கூறுகிறேன்.

பள்ளி வாசல் கட்டி முடியும் தறுவாயில் எனது பதவிக்கு சதித் திட்டம் போடத் தொடங்கினார்கள். இந்த நேரத்தில் நான் எடுத்த முயற்சி என்னால் முடிவுற வேண்டுமென்ற நோக்கத்தினாலும், அத்தருணத்தில் நான் விலகிவிட்டால் பள்ளி வாயல் இறுதி வேலை எப்படி ஆகிவிடுமோ என்ற சந்தேகத்தினாலும் எனது பதவியைக் காப்பாற்றிக் கொண்டேன். இவ்வளவு பிரயாசைப் பட்டதற்குக் காரணம் 115 வருட காலத்துக்கு முதல் முன்பிருந்த சிறிய மெத்தைப் பள்ளி வாயலை உடைத்துத் தரை மட்டமாக்கி புதிதாக பெருப்பித்து 1860ம் ஆண்டு அல்லாஹ்வின் உதவியால் கட்டி முடித்தவர் எனது அப்பாவேயாகும்.

இதைத் தொடர்ந்து 1918ம் ஆண்டு நியமிக்கப்பட்ட 30 மரைக்காயமார்களில் எனது தகப்பனாரும் ஒருவர். அவருடைய தேக்கந் தோட்டத்திற்கு போற வழியில் தும்பாலஞ்சோலை பங்களாவில் மரங்கள் ஏல விற்பனை நடைபெற்றதைக் கண்டு ''பள்ளி வாசலுக்கு ஹவ்லு வீடு கட்ட நல்ல மரங்களாக இருக்கின்றதே என்று வாங்கி அவருடை பெயருக்கே பேர்மிட்டும் எடுத்து வாகன வசதி குறைந்த அக்காலத்தில் மிகச் சிரமப்பட்டு பள்ளி வாசலுக்கு கொண்டுவந்து சேர்த்தவரும் அவரேயாகும்.

இப்படியாக, எனது அப்பாவும், தந்தையும் இப் பள்ளி வாசலுக்காக பிரயாசைப்பட்டார்களே அவர்களின் வழிவந்த நானும் இதை முன்னின்று கட்டி முடிக்கவேண்டிய பொறுப்பை அல்லாஹ்வின் உதவியால் பொதுமக்கள் மூலம் பெற்றேன்.

இது இப்படியிருக்க பொதுமக்கள் என்னிடம் பலமுறை ஜனாப் **A. P. M.** அவர்கள் தண்ணி டாங்கி ரோட்டு ஓரமாக பள்ளி வாசல் பூமியில் கடைகளும், நெற்களமும் கட்டிக்கொண்டு ஆட்சி புரிந்து வருவதையிட்டு முறையிட்டுள்ளார்கள்.

இதை மரைக்காய மார்களின் கூட்டத்தில் வைத்துக் கேட்ட போது, தான் பணம் போட்டு கட்டி முடித்த படியால் 2 அறைகளை எடுத்துக்கொண்டு ஒரு அறையை மட்டும் பள்ளி வாசலுக்குத் தருவதாகச் சொன்னார். அதற்கு மரைக்காயமார்கள் சபை ஒப்புக்கொண்டார்கள் எனக்கு விருப்பமில்லாதிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் நானும் அப்போது சரி என்றேன்.

ஆனால் எனது நண்பரும், சகோதரருமான ஜனாப் **A. P. M** நூகு லெப்பை ஹாஜியார் அவர்களுடன் எந்த விதமான குறையும் எனக்கில்லை. நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நீங்கள் விரும்பாதிருந்த போதிலும் உங்களை மற்றைய இரண்டு மரைக்காயமார்களும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்ட படியால் நீங்களும் தவிர்க்க முடியாத காரணத்தால் சேர்ந்து நின்றீர்கள். உண்மையில் என்மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு நீங்கள் விரும்பவில்லை என்பதை நான் மிகத் தெளிவாக பின்னர் அறிந்து உணர்ந்தேன். நானும், உங்களுடன் மிகவும் சந்தேகம் கொண்

டிருந்தேன். அச் சந்தேகத்தை நான் முற்றுக நீக்கி விட்டேன். நான் கொண்டிருந்த சந்தேகத்திற்காக என்னை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

என்னை ஜனுப் A. P. M. அவர்கள் என்ன சொன்னாலும்சரி பரவாயில்லை, உங்களுடைய பொருளாதாரத்தோடு பள்ளிப் பூமியில் நீங்கள் கட்டிய கடையையும் நெற்களத்தையும் சேர்க்க வேண்டாம்; அதை முற்ருய்ப் பள்ளி வாசலுக்கே வக்பு செய்து விடுங்கள். தங்களுக்கு, கட்டிடங்கள் கட்டிய வகையில் ஏற்பட்ட செலவுகளையும் முற்ருய் ஆல்லாஹ்வுடைய வீட்டுக்காக வக்பு செய்து விடுங்கள்

அப்படித் தாங்கள் விரும்பாவிடில், நீங்கள் செலவு செய்த தொகையை முற்ருய்ப் பள்ளி வாசல் நிதியிலிருந்து தந்து விடுகிறோம்.

மேலும்:- நாம் எவ்வளவு கோடிக் கணக்கில் சம்பாத்தியம் பண்ணி வைத்தாலும் எதையும் நாம் கொண்டுபோக மாட்டோம்.

மர்ஹூம் அல்-ஹாஜ் N. D. H. அப்துல் கபூர் அவர்கள் தம்மக்களுக்கு தம்முடைய சொத்துக்களைப் பிரித்துக் கொடுக்கும் போது அவர்களுடைய சொத்துக்களில் ஒன்ருன - மிகப் பிரபல்யமான ''கோல்பே''சிலுள்ள பில்டிங் ஒன்றை மக்களுக்கு எழுதிக்கொடுக்காமல் ஏனைய சொத்துக்களைப் பிரித்துக் கொடுத்தார்கள். அப்போது, இந்தக் கட்டிடத்தை யாருக்குக் கொடுப்பதென்று வினவியதற்கு அது எனக்குரியது. அதை நான் கொண்டு போகப்போகிறேன் என்று சொன்னார்கள்.

அதை என்ன செய்தார்கள் என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம். ஆகவே, ஜனுப் A. P. M. அவர்களே! உங்களுக்கு ஆண்டவன் கடலைப்போல் கஜானவை துறந்து தந்திருக்கும்போது, கடுகுபோல் உள்ள பள்ளிப் பூமியில் கட்டிய கடைகளுக்கு ஆசைப்படவேண்டாம் என மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதன் தவாபுகளை இம்மையிலும். மறுமையிலும் பெற்றுக்கொள்வீர்கள். ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்.

மேலும் இப்பள்ளி வாசல் விசயத்தில் எனக்கு என்றுமே உதவக் கூடிய சில மரைக்காயமார்களை இழக்க நேரிட்டதையிட்டு மிகவும் துக்கப் படுகிறேன். எனது சொந்த நலனுக்காக நான் யாரையும் பகைத்தது கிடையாது. இப்பள்ளி வாசல் மரைக்காயர்களான ஜனுப்கள் P. M. M. A. அபூபக்கர் ஹாஜியார் M. M. முகம்மதலி ஹாஜியார் ஆகியோர்களின் மனக்கசப்பு தவிர்க்கமுடியாததாகிவிட்டது. இத்தனைக்கும் நான் செய்த தவறு ஒன்றே ஒன்றுதான். பள்ளிவாசலை உடைக்க அவர்களை அழைத்ததும், வராததன் காரணமாக பள்ளி வாசலை உடைத்ததுதான்.

இப்பள்ளிவாசலை உடைக்க நான் யோசித்து அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிந்து ''அல்லாஹ்வே இது உனக்குப் பொருத்தமாக இருந்

தால் எனக்கு வல்லமையையும், உனது அருளையும் தந்தருள் இதைச் செய்து முடிக்கப் பலரும் முட்டுக்கட்டை போடுகிறார்கள். நீதான் சகல விசயங்களையும் உள் விளங்கியவனாயிருக்கிறாய்'' என்று பிரார்த்தனை புரிந்து இரு சீட்டுக்களை எழுதிப் போட்டுப்பார்த்தேன். பள்ளிவாசலை உடைக்கும் படி எழுதிய சீட்டுத்தாள் எனக்குக் கிடைத்தது.

இதற்கேற்ப அல்லாஹ் அருளால் 1-8-68ல் பள்ளி வாசலுக்காக வசூல் எடுக்கத் தொடங்கியது 14-3-69ல் பள்ளிவாசல் பிரிக்கப்பட்டது. 7-9-73ல் பள்ளிவாசல் கட்டிமுடிந்து சங்கைக்குரிய மசூத் ஆலிம் அவர்களால் ''கொத்பா'' உடன் குடி புகுதப்பட்டது. 16-9-73ல் பெரிய கந்தூரி கொடுக்கப்பட்டது. 15-10-73ல் கணக்குகள் யாவும் பள்ளிவாசலில் ஜும்மாவில் வாசிக்கப்பட்டது.

31-3-74ல் பள்ளிவாசல் கணக்குகள் யாவும் பள்ளி வாசலில் தொங்கவிடப்பட்டு, பள்ளிவாசல் பரிபாலனக் கமிஷனர் அவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

குறிப்பு:- கமிஷனருக்கு அனுப்பிய கணக்குகள் இதன் பின் காட்டப்பட்டுள்ளது. இதன் பின்னுள்ள கணக்குகள் யாவும் நிருவாகப்புத்தகத்தில் தனாதிகாரி ஜனாப் ஆ. ம. அகமது மீராசாகிபு ஹாஜியார் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

1-8-68 தொடக்கம் 16-9-73 வரை 5 வருடமும் 1 மாதமும், 15 நாளும் பள்ளிவாசல் வேலைகள் நடைபெற்றன.

நான் தலைவராக இருந்தபோதிலும் இதற்குத் தகுதியும், மார்க்கக் கல்வி, ஆங்கிலம் கற்றவர்களும் அனுபவமுள்ளவர்களுமான ஜனாப்களான:- M. A. ஆதம்லெவ்வை ஆலிம் ஹாஜியார் அவர்களையும் A. அகமது லெப்பை J. P. (ப. ச தலைவர்) அவர்களையும் முறையே தலைவராகவும், செயலாளராகவும் நியமிக்கப்படத் தகுதியுள்ளவர்கள். இத்துடன், இவர்களிருவரும் 2ம், 3ம் குறிச்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் நல்லதென நினைக்கிறேன் இதுபோல் கூட்டுத் தனாதிகாரியாக 2ம், 3ம் குறிச்சிக்கு ஜனாப்களான:- ஆ. ம. அகமது மீராசாகிபு ஹாஜியார், ஆதம்பாவா மரைக்காயர், முகம்மதிஸ்மாயில் மரைக்காயர் அவர்களையும் நியமிப்பது நல்லதென்பது எனது ஆலோசனையாகும்.

தவிர மேற்கூறிய நான்கு மரைக்காயமார்களும் ஒன்றிணைந்து பொதுக்கூட்டம் போட்டு பல்கேரியாக் கண்டம் தொடக்கம் 2ம், 3ம் குறிச்சி வரை 40 மரைக்காயமார்களை பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நியமிக்கவேண்டுமென்பது எனது எண்ணமாகும்.

எதிர்வரும் 1976ம் ஆண்டு புதிய மரைக்காயமார்கள் தெரிவு நடைபெறவிருப்பதால், பொதுமக்களாகிய நீங்கள் பொதுக்கூட்டம் போட்டு நான் மேற்கூறிய விடயங்களை முற்றாய் முடிக்குமாறு உங்களனைவரையும் வேண்டிக் கொள்கிறேன்.

முகையதீன் மெத்தைப்பள்ளி வாசல் காத்தான்குடி.

1974ம் ஆண்டு பங்குனி மீ 31ந் திகதி முடியவுள்ள கணக்கு விபரம்.

மரைக்காயர்மார்களாலும், உள்ளூர், வெளியூர் பொதுமக்களாலும் பள்ளி வாசல் மேல்மாடி போட்டுக் கட்டுவதற்காக நன்கொடையாகத் தரப்பட்ட மொத்த வசூல்களில் பொதுமக்கள் தந்த செக்குகளில் திரும்பிய செக்குத்தொகை ரூ. 1285/- நீக்கி மொத்தம் ரூ.		260348-99
பள்ளிவாயல் கட்டிட பெரிய உண்டியலில் சேர்ந்த மொத்தத் தொகை		19320C-00
கடை வாடகை, புகாரி ஏனைய வருமானங்களில் கட்டிட வகைக்காக எடுத்து செலவு செய்த தொகை		7278-77
பழைய மரங்கள், மிஞ்சிய சிகப்பு சீமந்தி, வெற்று பேக்கு விற்ற வகையில் கிடைத்த மொத்த தொகை ரூ.		18925-77
சந்தைக்கு வளவு வாங்கி விற்ற வகையில் ரூ.		16500-00
அகமன் போடியார் மக்கூன் காணி வித்து நன்கொடை செய்த வகையில் ரூ.		8000-00
அ. ம. முகம்மதிபுறுலெவ்வை லீட்டு போடும் நேரம் தருவதாக பற்றிக்கொண்ட ரூ.	1500-00	
மிஞ்சிய மாபிள் விற்ற காசு ரூ.		8525-00
சீனி ஓடாவியாருக்கு மரம் விற்ற வகை வரவு ரூ.		2000-00
A. B. M. முஸ்தபாலெவ்வைக்கு கொடுமதி ரூ.		2691-55
M. I. ஆதம்லெவ்வை மாஸ்டருக்கு கொடுமதி ரூ.		2000-00
அம்பாறை றேமன்ஸ் கொடுமதி ரூ.		160-00
M. S. அலியாருக்கு கொடுமதி ரூ.		96-00
மு. இ. மு. ஹாஜியாருக்கு கொடுமதி ரூ.		6624-51
ஸ்டேஷனறி செலவு ரூ.	811-09	
தபால் தந்தி செலவு ரூ.	131-46	
லொறி கூலி, வண்டி கூலி, றயில் சார்ஜ் ரூ.	8382-10	
தளர்பாடம் ஒலிபெருக்கி கொள்முதல் ரூ.	6595-00	
பிரயாண செலவு ரூ.	20499-64	
லைட் மின்சார செலவு ரூ.	14935-00	
சம்பளச் செலவு ரூ.	135089-91	
சிப்பந்தி செலவு ரூ.	813-70	
கட்டிடப்பொருள் கொள்முதல் ரூ.	337592-69	
ஆகக்கூடியது ரூ.	526350-59	526350-59

நன்றியுரை.

இப்பள்ளிவாசலைப் புணருத்தாரணம் செய்து முடிப்பதற்கு என்னோடு இறுதிவரை ஒத்துழைத்தவர்களில் ஜனுப் A. அகமதுலெப்பை J. P. அவர்களும், ஜனுப் M. A. ஆதம்லெப்பை ஆலிம் ஹாஜியார் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

இதில் ஜனுப் A. அகமதுலெப்பை J. P. அவர்களின் ஒத்துழைப்பு எனக்கில்லை என்றால் அல்லாமுந்தி இரண்டாவது இப்பள்ளிவாசலைக் கட்டி முடித்திருப்பேனு என்பது விணுவிற்குரியதே. பள்ளிவாசலுக்காக முதன்முதல் வசூல் தந்து வசூல் பண்ணுவதற்காக இலங்கையின் பல பாகங்களுக்கும் என்னுடன் சமுகமளித்து சீமெந்து பெறமுடியாத கஷ்டமான சந்தர்ப்பங்களில் எல்லாம் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பெற்றுத் தந்து கட்டிடத்தைப் பூர்த்திசெய்ய உதவிய நன்றி அவரையே சாரும்:

1964ம் ஆண்டு தொடக்கம் இப்பள்ளிவாசல் மரைக்காயராக இவரை வைக்க நாங்கள் முயற்சித்தபோதெல்லாம் மறுத்துரைத்த அவர் 1974ல் எனது விடாப்பிடியின் பேரிலும் நீங்கள் விரும்பாவிட்டால் நானும் விலகிக்கொள்கிறேன் என்று கூறியதின் பேரிலும்தான் அவர் விண்ணப்பம் அனுப்ப இணங்கினர். அன்னருக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலை மனப்பூர்வமாக கூறிவைக்க ஆசைப்படுகிறேன். அத்துடன் 14-3-69 பள்ளிவாசல் பிரிக்க தொடங்கிய அன்று தொடக்கம் 7-9-73 வரைக்கும் ஜனுப் M. A. ஆதம் லெவ்வை ஹாஜியார் என்னுடன் இப்பள்ளி வாசலுக்காக ஒத்துழைத்தார் என்பதற்காக அன்னருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். உலமாக்கள் மேலும் என்னுடன் ஒத்துழைத்த ஏனைய மரைக்காயமார்கள், பொதுமக்கள், உள்ளூர், வெளியூர்களில் நிதி உதவி வழங்கியவர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இங்ஙனம்
முகையதீன் மெத்தைப்பள்ளி வாயல்
பிரதம நம்பிக்கையாளர்.
மு. இ. மு. முகம்மது இபுருகீம்